GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

28-11-2022

Wesite Link : **https://gkrsinstitute.com/**

Telegram Link : **https://t.me/gkrsInstitute**

Faceook Link : **https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/**

மத்திய செய்திகள்

1. குடியரசு தின விழா தலைமை விருந்தினர் எகிப்து அதிபர் எல்-சிசி

- தேசியத் தலைநகர் தில்லியில் வரும் ஜனவரி 26-இல் நடைபெறவிருக்கும் குடியரசு தின விழாவில் தலைமை விருந்தினராக **எகிப்து அதிபர் அப்தல் ஃபதா எல்-சிசி** பங்கேற்கவிருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது.
- இந்திய குடியரசு தின விழாவில் தலைமை விருந்தினராக எகிப்து நாட்டின் அதிபர் பங்கேற்கவிருப்பது இதுவே முதல்முறை என்று அந்த அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- இந்தியா-எகிப்து இடையிலான தூதரக ரீதியிலான உறவுகள் நிறுவப்பட்டு 75-ஆவது ஆண்டை இரு நாடுகளும் கொண்டாடி வருகின்றன.
- தலைமை விருந்தினராக நட்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்று சிறப்பிப்பது வழக்கம்.
  - ✓ 1950 முதலே இந்த வழக்கம் தொடர்ந்து வருகிறது.
  - ✓ 1952, 1953, 1966 ஆகிய ஆண்டுகளில் வெளிநாட்டுத் தலைவர்கள் பங்கேற்பின்றி குடியரசு தின விழா நடைபெற்றது.
  - ✓ கடந்த 2021-இல் அப்போதைய பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்ஸனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதிலும் கரோனா பரவல் அதிகரிப்பு காரணமாக அவரது இந்திய பயணம் ரத்து செய்யப்பட்டது.
  - ✓ 2022-இல் 5 மத்திய ஆசிய நாடுகளின் தலைவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால், கரோனா சூழல் காரணமாக அவர்கள் பங்கேற்கவில்லை.
  - ✓ 2020-இல் பிரேஸில் அதிபர் ஜெயிர் பொல்சனாரோ தலைமை விருந்தினராகப் பங்கேற்றிருந்தார்.
  - ✓ 2016-இல் அப்போதைய பிரான்ஸ் அதிபர் பிரான்சுவா ஹொலாந்த்,
  - ✓ 2015-இல் அப்போதைய அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா,
  - ✓ 2007-இல் ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் தலைமை விருந்தினர்களாகப் பங்கேற்றிருந்தனர்.

2. வாராணசியில் மகாகவி பாரதியார் வாழ்ந்த வீட்டை புதுப்பிக்க பெருந்திட்டம்

- வாராணசியில் மகாகவி பாரதியார் நான்கு ஆண்டு காலம் வாழ்ந்த வீடான **'சிவமடத்தை'** புதுப்பிக்க பெருந்திட்டம் பரிசீலனையில் உள்ளது என்று வாராணசி மாவட்ட ஆட்சியர் எஸ்.ராஜலிங்கம் தெரிவித்தார்.
- வாராணசியில் உள்ள 'சிவமடத்தில்' மகாகவி பாரதியார் சுமார் 4 ஆண்டுகள் வாழ்ந்துள்ளார். அந்த வீட்டில் தற்போது மகாகவி பாரதியாரின் வழிவந்தவர்கள் வசித்து வருகின்றனர்.
- மகாகவி பாரதியாரின் இலக்கியப் படைப்புகள் **எண்ம (டிஜிட்டல்)** முறையில் நவீனமாக்கப்படும்.

- **சிவமடம்:**
  - ✓ வாராணசியில் உள்ள **அனுமன் காட்** எனும் பகுதியில் 1898- ஆம் ஆண்டுமுதல் 1902 வரை பாரதியார் தனது அத்தை வீட்டில் வசித்தார். அப்போது அவருக்கு வயது பதினாறு.
  - ✓ அவர் காசியில் வாழ்ந்த காலத்தில் பண்டித மதன் மோகன் மாளவியா, அன்னி பெசன்ட், பால கங்காதர திலகர் முதலிய முக்கிய அரசியல் ஆளுமைகளைச் சந்தித்து அவர்களுடன் விவாதித்துப் பல்வேறு தெளிவுகளைப் பெற்றார்.
- பாரதியைப் பற்றிய அறிமுக நூலை ஹிந்தி, ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் **கே.வி. கிருஷ்ணன்** எழுதியுள்ளார்..

மாநில செய்திகள்

1. மெரீனாவில் மாற்றுத்திறனாளிகளுக்கான நாட்டின் முதல் நடைபாதை

- மெரீனா கடற்கரையில் நாட்டின் முதல் மாற்றுத் திறனாளிகளுக்கான நடைபாதை திறந்து வைக்கப்பட்டது.
- சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மெரீனா கடற்கரையில் மாற்றுத்திறனாளிகளும் கடல் அலைகளை கண்டுகளிக்க ஏதுவாக **சிங்கார சென்னை 2.0** திட்டத்தின் கீழ் ரூ.1 கோடியே 14 லட்சத்தில் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற மரப்பலகைகளால் நடைபாதை அமைக்கப்பட்டு உள்ளது.

திட்டம்

1. 'வானவில் மன்றம்' திட்டம்

- அரசு பள்ளி மாணவ- மாணவிகளுக்கு **அறிவியல், கணித பாடங்களில் ஆர்வத்தை ஏற்படுத்த 'வானவில் மன்றம்' திட்டத்தை** முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் திருச்சியில் தொடங்கி வைக்கிறார்.
- **திருச்சி காட்டூர் ஆதி திராவிடர் பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு** செல்கிறார். அங்கு,அரசு பள்ளி மாணவ- மாணவிகளுக்கு அறிவியல் மற்றும் கணித பாடங்களில் ஆர்வத்தை ஏற்படுத்தும்வகையில் ரூ.25 கோடி செலவில் 'வானவில் மன்றம்' திட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

நியமனம்

1. இந்திய ஒலிம்பிக் சங்க தலைவராக பி.டி. உஷா

- பி.டி. உஷா போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

- இதன் மூலம் **ஐ.ஓ.ஏ.-யின் முதல் பெண் தலைவர்** என்ற பெருமையை பெறப்போகிறார்.
- **'தங்க மங்கை' என்று அழைக்கப்படும் பி.டி., உஷா**, 1986-ம் ஆண்டு சியோலில் நடந்த ஆசிய விளையாட்டில் 4 தங்கப்பதக்கத்தை அறுவடை செய்தவர் ஆவார்.
- 1984-ம் ஆண்டு ஒலிம்பிக்கில் 400 மீட்டர் தடை ஓட்டத்தில் மயிரிழையில் வெண்கலப்பதக்கத்தை நழுவவிட்டு 4-வது இடத்தைபெற்றார். மேல் சபை எம்.பி.யான அவர் இப்போது இந்திய விளையாட்டில் செல்வாக்குமிக்க பதவியை பிடிக்க உள்ளார்.

விளையாட்டு செய்திகள்

1. கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்த ஐ.பி.எல். இறுதி ஆட்டம்

- **15-வது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட்டின் இறுதி ஆட்டம்** கடந்த மே 29-ந்தேதி குஜராத் டைட்டன்ஸ்-ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் இடையே குஜராத் மாநிலம் அகமதாபாத் உள்ள நரேந்திரமோடி ஸ்டேடியத்தில் நடந்தது.
- குஜராத் டைட்டன்ஸ் வாகை சூடிய இந்த ஆட்டத்தை **ஒரு லட்சத்து 1,566 பேர் நேரில் கண்டுகளித்தனர்.** உலகில் 20 ஓவர் கிரிக்கெட்டில் அதிகம் பேர் நேரில் பார்த்த ஆட்டமாக இதை அங்கீகரித்து கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் வழங்கப்பட்டுள்ளது.

மனதின் குரல்

- ஆளில்லா சிறியரக விமானங்கள் (ட்ரோன்கள்) துறையிலும் இந்தியா வேகமாக முன்னேறி வருகிறது. **ஹிமாசலின் கின்னோர்** பகுதியில் சில நாள்களுக்கு முன் **ஆப்பிள் பழங்கள் ட்ரோன்கள் வாயிலாக** எடுத்துச் செல்லப்பட்டன.
- **தசைசிதைவு நோய் சிகிச்சை மையம்:**
  - ✓ மரபணு சார்ந்த அந்நோய், எந்த வயதினரையும் தாக்கும். அந்நோயால் பாதிக்கப்பட்டவரின் உடல் வலுவிழக்கத் தொடங்கும்.
  - ✓ அன்றாடப் பணிகளைக்கூட அவரால் செய்ய இயலாது. அத்தகைய நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்குப் பெரும் கவனம் தேவை. அத்தகைய சிகிச்சை மையம் **ஹிமாசலின் சோலன் மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது.**
  - ✓ அந்த நோய் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே அதிகரிக்க வேண்டும்.
- **புத்தக வாசிப்பு:**

- ✓ மக்களிடையே புத்தக வாசிப்புபழக்கத்தை ஏற்படுத்த **உத்தரபிரதேசத்தின் பன்சா கிராமத்தைச் சேர்ந்த ஜதின் லலித் சிங் என்பவர் 'மக்கள் நூலகத்தை ஏற்படுத்தியுள்ளார்.**
- ✓ ஜார்க்கண்டை சேர்ந்த **சஞ்சய் காஷ்யப்** என்பவர் பள்ளி மாணவர்களிடையே புத்தக வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து வருகிறார்.
- ✓ அதனால் அவர் **நூலக மனிதர்** என உள்ளூர் மக்களால் போற்றப்படுகிறார். நூலகத்தைத் தொடங்க வேண்டும் என்ற அவரது கனவு தற்போது சமூக இயக்கமாக மாறியுள்ளது. அவர்களது பணிதொடர வேண்டும் என்றார் பிரதமர் மோடி.